**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**

**S.C.No.30/2020**

**Prosecution Witness P.W. 7**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. முத்துப்பாண்டி | Calling | : தலைமை காவலர் |
| Father's name | : திரு. பாண்டி | Religion | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | |

நாள் **- 28.10.2025**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது மதுரை மாவட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு கீழவளவு காவல்நிலையத்தில் பணியாற்றிய போது, கடந்த 06.11.2016ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் காவல்ஆய்வாளர் உத்தரவின் பேரில், குற்ற எண்.413/2016 என்ற வழக்கில் கொலை செய்யப்பட்ட பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்வதற்காக மேலூர் அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் ஒப்படைத்து, சடலத்தை அடையாளம் காண்பித்து, பிரேதபரிசோதனை முடித்த பின்பு பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது, பிரேதபரிசோதனை எப்போது ஆரம்பித்து, எப்போது முடிவு பெற்றது என்றும், பிரேதத்தை எப்போது ஒப்படைத்தேன் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான்

செய்த பணிகள் வழக்கமான காவல்துறை பணிதான் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.10.29 10:20:51 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.